DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 323/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : லட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th June 2025.

**எதிரி ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் வடக்கு ஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். தற்போது நானும் எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம். சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம். சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கு பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். அதில் எழுதப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 02.06.2016 மதியம் 2.30 மணிக்கு எங்கள் வீட்டில் வைத்து எதிரி மண் வெட்டியுடன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து பெண் என்றும் பாராமல் என்னை அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. எதிரி மண்வெட்டியால் எனதுதலையில் அடித்துவிட்டு என்னை பார்த்து கொலைமிரட்டல் விடுத்து ஓடிவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்து போது நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 323/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : கருப்பசாமி என்ற கண்ணன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th June 2025.

**எதிரி ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் வடக்கு ஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். தற்போது நானும் எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம். சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு பற்றி எதுவும் நான் சொல்லவிரும்பவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

கடந்த 02.06.2016 மதியம் 2.30 மணிக்கு எங்கள் வீட்டில் வைத்து எதிரி மண் வெட்டியுடன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அ.சா.1ஐ பெண் என்றும் பாராமல் அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. எதிரி மண்வெட்டியால் அ.சா.1ன் தலையில் அடித்துவிட்டு அவரை பார்த்து கொலைமிரட்டல் விடுத்து ஓடிவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவம் பற்றி நான் கேள்விபட்டேன் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**